**O.S. 124 /2019, 27.10.2021, 11.15. Am**

**வா.சா.1:** ராமன் த/பெ. லேட். மாணிக்க முதலியார்

**முதல் விசாரணை:-**

திருப்பத்துார் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, செட்டியப்பனூார் கிராமம் நெ.1/16 கீழ் தெரு முகவரியில் வசிக்கும் லேட். மாணிக்க முதலியார் அவர்களின் குமாரர் .M.ராமன் வயது சுமார் 71 ஆகிய நான் பிரமாணமாய் கூறுவது யாதெனில்,

சத்தியமாக சொல்கிறேன். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.17.03.1940 தேதியிட்ட என்னுடைய தகப்பனாரின் கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.அந்த ஆவணத்தின் அசல் ஆனாது சார்பு நீதிமன்றத்தில உள்ளது. 26.11.2019 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான பட்டா வா.சா.ஆ.2. வழக்கு சொத்திற்க்கு உண்டான வரி ரசீதுகள் வா.சா.ஆ.3. (வரிசைகள் 7). 14.11.2019 வாதி காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி மீது புகார் கொடுத்ததற்கான CSR வா.சா.ஆ.4. வழக்கு சொத்து எடுக்கப்பட்ட புகைப்பட்ம் CD வா.சா.ஆ. 5.தாவாப்படி தீர்பாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.